# காமத்துப்பாலில் விருத்தப்பா கூறுகள்

**இரா.கார்த்திகா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
ஆய்வு நெறியாளர் : **முனைவர் ஜெ.தேவி**

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் பேசப்படும் மொழிகள் பலவற்றுள் சில மொழிகள் மட்டுமே எழுத்து வடிவமும் கொண்டு திகழ்கின்றன. அத்தகைய மொழிகளுள் உயர்தனிச் செம்மொழியாக விளங்குவது தமிழ்மொழி. அதற்குக் காரணம் தமிழ்மொழியின்கண் காணலாகும் இலக்கிய மற்றும் இலக்கண வளம் ஆகும். இன்றளவும் இலக்கிய வளம் குன்றாமல் நிலைபெறுவதற்குத் தமிழ்மொழியில் உள்ள பல்வேறு படைப்புகள் ஆகும். தமிழின் தொடக்க காலப் படைப்புகளில் எதுகையும் மோனையும் சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்த சூழல், காலப்போக்கில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு இலக்கணக் கட்டுகோப்புகளில் தளர்வுகளைப் பெறத்தொடங்கி, இன்று கருத்தாழம் மட்டும் அமைந்தால் போதும் என்றும் இலக்கணக் கட்டுக்கோப்பு அவசியமற்றது என்றும் கருதும் நிலை உருவாகிவிட்டது. கடுமையான இலக்கணக் கட்டுக்கோப்பு உடைத்தெறியப்படுவதற்குப் பல்வேறு காலக்கட்டங்கள் தேவைப்பட்டுள்ளன. பண்டைய இலக்கணக் கட்டுக்கோப்பிற்கும் இக்கால புதுக்கவிதை வடிவத்திற்கும் இடையேயான கால ஓட்டத்தை ஆராய வேண்டியது அவசியமான ஒன்றாகும். அவ்வாறு ஆராயும்போது இலக்கணக் கட்டுக்கோப்பில் எளிமை நோக்கிய பயணத்தின் தோற்றுவாயாக விளங்குவது விருத்தப்பா எனும் வடிவமாகும். இவ்வடிவம் அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம் எனப் பல்கிப் பெருகியது. இவை யாவும் சந்த நயத்தை மட்டுமே தனது கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வாய்பாடு அடிப்படையிலான இலக்கணக் கட்டமைப்பு ஆகும். இதுபோன்ற இலக்கணக் கட்டமைப்பு உருவாகத் திருக்குறள் காரணமாக இருந்துள்ளதா என ஆயும் நோக்கில் இக்கட்டுரை அமைக்கப் பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள்:** விருத்தம், விருத்தப்பா, காமத்துப்பால், குறட்பாவில் விருத்தம், குறளும் விருத்தமும்.

## முன்னுரை

தமிழ் இலக்கியப்பரப்பில் அகம், புறம், அறம் என்னும் பகுப்பு முறைகளில் உருவாக்கப்படும் இலக்கியங்கள் யாவும் தனக்கெனத் தனித்த அடையாளத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. அவற்றுள் அற இலக்கியங்களானது மானுட வாழ்வின் செம்மையான வழிமுறைகளை எடுத்தியம்பும் தீந்தமிழ் பனுவல்களாகத் தமிழ் உலகில்

வளம் வருவதோடு, தமிழ்மொழி பேசும் மக்களின் உயர் மாண்புகளை அயலகத்தாரும் அறிந்து கொள்ளும் வண்ணம் பீடுநடை போடுகின்றது. இவ்வற இலக்கியங்களின் பெட்டகமாக விளங்குவது சங்கம் மருவிய கால இலக்கியங்கள் எனப்படும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களே ஆகும். அவற்றுள்ளும் முப்பால் எனப் போற்றப்படும் திருக்குறள் வான்புகழை எட்டிய அற இலக்கியம் எனில் அது மிகையாகா.

குறுவெண்பாட்டு என்று தொல்காப்பியமும் குறள் வெண்பா என்று காரிகையும் எடுத்தியம்பும் யாப்பு வடிவில் செம்மையான இலக்கணக் கட்டுக்கோப்புகளுடன் யாக்கப்பட்டுள்ள இத்திருக்குறள், யாப்பியல் உலகில் குறள் வெண்பாவின் இலக்கணக் கட்டமைப்புக்குச் சான்றிலக்கியமாகவே அமைந்துள்ளது.

இன்றளவில் பல்வேறு கவிஞர்கள் யாப்பிலக்கண வரையறைகள் மீது பெரிதும் வேட்கை காட்டாமல், புதுக்கவிதை வடிவங்களைப் படைப்பாக்கங்களாக வெளிப்படுத்துகின்றனர். இத்தகைய போக்குக்குக் காரணம் யாதெனின், மரபுச் செய்யுள் படைப்பாக்கங்களில் இலங்குகின்ற இலக்கணக் கட்டமைப்பின் கடினத்தன்மையே என்பது பல்வேறு புதுக்கவிதையாளர்களின் ஒருமித்த கருத்தாகும். ஆயினும் இப்புதுக்கவிதை வடிவங்கள் யாவும் ஓரிரவில் தோன்றியவையன்று. யாப்பிலக்கணக் கட்டமைப்பில் தளர்வுகள் கொடுத்து, புதுக்கவிதை வடிவம் மலர, பல்வேறு காலங்கள் பயணித்திருக்க வேண்டும். அப்பயணப் பாதையைக் கூர்ந்தாய்வு செய்ய வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

அவ்வாறு ஆயுங்கால், இலக்கணக் கடினத் தன்மையைக் கட்டுடைப்புச் செய்யும் முதல் வடிவமாக விருத்தப்பாக்களைக் கருத இயலும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை எனும் யாப்புறுப்புகளுள் பலவற்றை புறந்தள்ளி சீர் வாய்பாடு முறையை மட்டுமே இலக்கணக் கட்டமைப்பாகக் கொண்டு விருத்தப்பாக்கள் உருபெற்றுள்ளன என்பதை அறிய முடிகின்றது. இதற்கு அடிப்படைகள், திருக்குறளில் உள்ளதா? என ஆராயும் பொருட்டு, திருக்குறளில் காமத்துப்பாலில் உள்ள 250 குறள்களை மட்டும் ஆய்வு எல்லையாக எடுத்துக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## விருத்தப்பா – அறிமுகம்

விருத்தப்பாவால் அமைந்த முதல் நூலாகக் கருதப்படுவது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான திருத்தக்கதேவர் இயற்றிய சீவகசிந்தாமணியே ஆகும். குண்டலகேசி, சூளாமணி, உதயண குமார காவியம், கம்பராமாயணம், விவேக சிந்தாமணி, உலகநீதி, நீதி நூல், எழில் விருத்தம் போன்ற நூல்கள் விருத்தப்பாவால் அமைந்தவை.

விருத்தம் எனில் பெருமை, வேறுபாடு, இசையின்றி உரைநடையிற் சொல்லப்படுவது என்றெல்லாம் பொருள் கொள்ளலாம் எனவும் விருத்தம் எனில் தொடக்கம் என்றும், வரலாற்றின் தொடக்கமும் முடிவும் என்று பொருள் எனவும் புலவர்.வெற்றியழகன் கூறுவது நோக்கத்தக்கது.

**விருத்தம் - இலக்கணம்**

**நான்கடி யானு நடைபெற் றடிதொறுந்**
**தான்றனிச் சொற்கொளின் வெளிவிருத் தம்மே.**

ஒரு செய்யுள் நான்கடியால் வந்து அடிதோறும் தனிச்சொல் இடம்பெற்றால் வெளிவிருத்தம் ஆகும். மேற்கண்ட நூற்பாவில் நான்கடியானும் என உம்மை பெற்றுள்ளதால் மூன்றடியாகவும் வெளிவிருத்தம் அமையப் பெறலாம் என யாப்பருங்கல விருத்தியுரை விளக்கம் தருவது ஆராயத்தக்கது.

ஆசிரியப்பாவிற்கு அகவற்பா எனப் பெயர் குறிப்பிடுவது போன்று அகவல் விருத்தம் எனினும் ஆசிரிய விருத்தம் எனினும் ஒத்த பொருள் உடையதே.

**கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ**
**தழியா மரபின தகவ லாகும்.**

கழிநெடிலடி நான்கினைப் பெற்று தம்முள் அளவொத்து முடிந்தால் அஃது ஆசிரியவிருத்தம் ஆகும்.

**அளவடி நான்கின கலிவிருத் தம்மே.**

நான்கு சீர் கொண்டும் நான்கு அடிகளை உடையதுமாக அமைவன கலிவிருத்தம் ஆகும்.

**சிந்தடி நான்காய் வருவது வஞ்சிய**
**தெஞ்சா விருத்த மென்மனார் புலவர்.**

மூன்று சீர்கள் கொண்டும் நான்கு அடிகளைக் கொண்டும் வரும் செய்யுள், வஞ்சி விருத்தம் ஆகும்.

**காமத்துப்பாலில் விருத்தப்பாக் கூறுகள்**

தமிழின் தலைசிறந்த அற இலக்கியமாகக் கருதப்படும் திருக்குறளில் வாய்பாடு ஒன்றிவரும் அமைப்பின் குறள்கள் அமைந்துள்ளனவா என்று ஆராய்ந்து கீழ்க்கண்ட தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

**காய் காய் காய் மா காய் மா நிரை**

திருக்குறளின் காமத்துப்பாலில் உள்ள 250 குறள்களில் காய் காய் காய் மா காய் மா நிரை என்னும் வாய்பாட்டில் குறள் எண்களான 1138, 1228, 1254, 1260,1303 ஆகிய
ஐந்து குறள்கள் ஒன்றிவருவது நோக்கத்தக்கது.

**நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்**
**மறையிறந்து மன்று படும்.** **(குறள்.1138)**

| | | | |
|---|---|---|---|
| நிறை / யரி / யர் | – கருவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| மன் / னளி / யர் | – கூவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| என் / னா / து | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| கா / மம் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| மறை / யிறந் / து | – கருவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |

| | | | |
|---|---|---|---|
| மன் / று | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| படும் | – நிரை | – மலர் | – **நிரை** |

**அலல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்**
**சூழல்போலும் கொல்லும் படை. (குறள்.1228)**

| | | | |
|---|---|---|---|
| அலல் / போ / லும் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| மா / லைக் / குத் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| தூ / தா / கி | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| ஆ / யன் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| சூழல் / போ / லும் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| கொல் / லும் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| படை | – நிரை | – மலர் | – **நிரை** |

**நிறையுடையேன் என்பேன்மன் யாமோவென் காமம்**
**மறையிறந்து மன்று படும். (குறள்.1254)**

| | | | |
|---|---|---|---|
| நிறை / யுடை / யேன் | – கருவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| என் / பேன் / மன் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| யா / னோ / வென் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| கா / மம் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| மறை / யிறந் / து | – கருவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| மன் / று | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| படும் | – நிரை | – மலர் | – **நிரை** |

**நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு குண்டோ**
**புணர்ந்தூடி நிற்பேம் எனல். (குறள்.1260)**

| | | | |
|---|---|---|---|
| நிணந் / தீ / யில் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| இட் / டன் / ன | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நெஞ் / சினார்க் / கு | – கூவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| குண் / டோ | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| புணர்ந் / தூ / டி | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நிற் / பேம் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| எனல் | – நிரை | – மலர் | – **நிரை** |

**அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல். (குறள்.1303)**

| | | | |
|---|---|---|---|
| அலந் / தா / ரை | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| அல் / லல் / நோய் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| செய் / தற் / றால் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |

| | | | |
|---|---|---|---|
| தம் / மைப் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| புலந் / தா / ரைப் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| புல் / லா | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| விடல் | – நிரை | – மலர் | – **நிரை** |

**காய் காய் மா காய் காய் மா நிரை**

திருக்குறளின் காமத்துப்பாலில் உள்ள 250 குறள்களில் காய் காய் மா காய் காய் மா நிரை என்னும் வாய்பாட்டில் குறள் எண்களான 1160, 1253, 1261 ஆகிய மூன்று குறள்கள் ஒன்றிவருவது நோக்கத்தக்கது.

**அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்**
**பின்இருந்து வாழ்வார் பலர். (குறள்.1160)**

| | | | |
|---|---|---|---|
| அரி / தாற் / றி | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| அல் / லல் / நோய் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நீக் / கிப் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| பிரி / வாற் / றிப் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| பின் / இருந் / து | – கூவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| வாழ் / வார் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| பலர் | – நிரை | – மலர் | – **நிரை** |

**மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்**
**தும்மல்போல் தோன்றி விடும். (குறள்.1253)**

| | | | |
|---|---|---|---|
| மறைப் / பேன் / மன் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| கா / மத் / தை | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| யா / னோ | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| குறிப் / பின் / றித் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| தும் / மல் / போல் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| தோன் / றி | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| விடும் | – நிரை | – மலர் | – **நிரை** |

**வாளற்றுப் புற்கென்றே கண்ணும் அவர்சென்ற**
**நாளொற்றித் தேய்ந்த விரல். (குறள்.1261)**

| | | | |
|---|---|---|---|
| வா / ளற் / றுப் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| புற் / கென் / றே | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| கண் / ணும் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| அவர் / சென் / ற | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நா / ளொற் / றித் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| தேய்ந் / த | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| விரல் | – நிரை | – மலர் | – **நிரை** |

**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 01 January-March 2024**

**காய் காய் மா காய் காய் மா நிரைபு**

திருக்குறளின் காமத்துப்பாலில் உள்ள 250 குறள்களில் காய் காய் மா காய் காய் மா நிரைபு என்னும் வாய்பாட்டில் குறள் எண்களான 1174,1218 ஆகிய இரண்டு குறள்கள் ஒன்றிவருவது நோக்கத்தக்கது.

**பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா**
**உய்வில்நோய் என்கண் நிறுத்து. (குறள்.1174)**

| | | | |
|---|---|---|---|
| பெய / லாற் / றா | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நீ / ருலந் / த | – கூவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| உண் / கண் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| உய / லாற் / றா | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| உய் / வில் / நோய் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| என் / கண் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| நிறுத் / து | – நிரைபு | – பிறப்பு | – **நிரைபு** |

**துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்**
**நெஞ்சத்தர் ஆவர் விரைந்து. (குறள்.1218)**

| | | | |
|---|---|---|---|
| துஞ் / சுங் / கால் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| தோள் / மே / லர் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| ஆ / கி | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| விழிக் / குங் / கால் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நெஞ் / சத் / தர் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| ஆ / வர் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| விரைந் / து | – நிரைபு | – பிறப்பு | – **நிரைபு** |

**காய் காய் மா காய் மா மா நிரை**

திருக்குறளின் காமத்துப்பாலில் உள்ள 250 குறள்களில் காய் காய் மா காய் மா மா நிரை என்னும் வாய்பாட்டில் குறள் எண்களான 1115, 1223, 1279, 1282 ஆகிய நான்கு குறள்கள் ஒன்றிவருவது நோக்கத்தக்கது.

**அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை. (குறள்.1115)**

| | | | |
|---|---|---|---|
| அனிச் / சப் / பூக் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| கால் / களை / யாள் | – கூவிளங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| பெய் / தாள் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| நுசுப் / பிற் / கு | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நல் / ல | – தேமா | – மாச்சீர் | – **மா** |

| | | | |
|---|---|---|---|
| படா / அ | – புளிமா | – மாச்சீர் | – **மா** |
| பறை | – நிரை | – மலர் | – **நிரை** |

**பனியரும்பிப் பைதல்கொள் மாலை துனியரும்பித்**
**துன்பம் வளர வரும். (குறள்.1223)**

| | | | |
|---|---|---|---|
| பனி / யரும் / பிப் | – கருவிளக்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| பை / தல் / கொள் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| மா / லை | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| துனி / யரும் / பித் | – கருவிளக்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| துன் / பம் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| வள / ர | – புளிமா | – மாச்சீர் | – **மா** |
| வரும் | – நிரை | – மலர் | – **நிரை** |

**தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃதாண் டவன்செய் தது. (குறள்.1279)**

| | | | |
|---|---|---|---|
| தொடி / நோக் / கி | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| மென் / தோ / ளும் | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| நோக் / கி | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| அடி / நோக் / கி | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| அஃ / தாண் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| டவன் / செய் | – புளிமா | – மாச்சீர் | – **மா** |
| தது | – நிரை | – மலர் | – **நிரை** |

**திணைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின். (குறள்.1282)**

| | | | |
|---|---|---|---|
| திணைத் / துணை / யும் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| ஊ / டா / மை | – தேமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| வேண் / டும் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| பனைத் / துணை / யும் | – புளிமாங்காய் | – காய்ச்சீர் | – **காய்** |
| கா / மம் | – தேமா | – மாச்சீர் | – **மா** |
| நிறை / ய | – புளிமா | – மாச்சீர் | – **மா** |
| வரின் | – நிரை | – மலர் | – **நிரை** |

இதே போன்று காய் காய் மா விளம் விளம் மா நிரை எனும் வாய்பாட்டில் 1156, 1161 ஆகிய இரண்டு குறள்களும், காய் மா காய் காய் காய் மா நிரை எனும் வாய்பாட்டில் 1094, 1205, 1222 ஆகிய மூன்று குறள்களும், காய் மா காய் காய் காய் மா நிரைபு எனும் வாய்பாட்டில் 1092, 1128 ஆகிய இரண்டு குறள்களும், காய் மா காய் காய் மா மா நிரை எனும் வாய்பாட்டில் 1192, 1286, 1299 ஆகிய மூன்று குறள்களும், காய் மா காய் மா காய்

மா நிரை எனும் வாய்பாட்டில் 1119, 1263 ஆகிய இரண்டு குறள்களும், காய் மா மா காய் காய் மா நிரைபு எனும் வாய்பாட்டில் 1113, 1221, 1276 ஆகிய மூன்று குறள்களும், காய் மா மா காய் காய் விளம் நேர்பு எனும் வாய்பாட்டில் 1083, 1140, 1288 ஆகிய மூன்று குறள்களும், காய் மா விளம் விளம் காய் மா நிரை எனும் வாய்பாட்டில் 1111, 1151, 1195 ஆகிய மூன்று குறள்களும், காய் விளம் மா காய் காய் மா நிரை எனும் வாய்பாட்டில் 1225, 1267 ஆகிய இரண்டு குறள்களும், காய் விளம் மா காய் மா மா நிரை எனும் வாய்பாட்டில் 1172, 1185 ஆகிய இரண்டு குறள்களும், மா காய் காய் மா காய் மா நிரைபு எனும் வாய்பாட்டில் 1097, 1269 ஆகிய இரண்டு குறள்களும், மா காய் மா காய் விளம் மா நிரை எனும் வாய்பாட்டில் 1165, 1207, 1291 ஆகிய மூன்று குறள்களும், மா காய் மா மா காய் விளம் நேர்பு எனும் வாய்பாட்டில் 1089, 1292 ஆகிய இரண்டு குறள்களும், மா மா காய் காய் மா மா நிரை எனும் வாய்பாட்டில் 1194, 1204, 1245 ஆகிய மூன்று குறள்களும், மா மா மா விளம் காய் மா நிரைபு எனும் வாய்பாட்டில் 1102, 1301 ஆகிய இரண்டு குறள்களும், மா மா விளம் காய் விளம் மா நிரை எனும் வாய்பாட்டில் 1315, 1329 ஆகிய இரண்டு குறள்களும், மா மா விளம் விளம் மா மா நிரை எனும் வாய்பாட்டில் 1277, 1324 ஆகிய இரண்டு குறள்களும், மா விளம் மா காய் விளம் மா நிரைபு எனும் வாய்பாட்டில் 1208, 1237 ஆகிய இரண்டு குறள்களும், விளம் காய் காய் மா விளம் மா நிரை எனும் வாய்பாட்டில் 1098, 1162 ஆகிய இரண்டு குறள்களும், விளம் காய் மா காய் காய் மா நிரை எனும் வாய்பாட்டில் 1189, 1190 ஆகிய இரண்டு குறள்களும், விளம் காய் மா விளம் காய் மா நிரை எனும் வாய்பாட்டில் 1220, 1256 ஆகிய இரண்டு குறள்களும், விளம் மா காய் மா விளம் மா நிரைபு எனும் வாய்பாட்டில் 1180, 1326 ஆகிய இரண்டு குறள்களும், விளம் மா மா காய் விளம் விளம் நேர்பு எனும் வாய்பாட்டில் 1146, 1264 ஆகிய இரண்டு குறள்களும், விளம் மா மா விளம் காய் மா நிரை எனும் வாய்பாட்டில் 1168, 1217,1266 ஆகிய மூன்று குறள்களும், விளம் மா மா விளம் விளம் மா நிரைபு எனும் வாய்பாட்டில் 1085, 1193 ஆகிய இரண்டு குறள்களும், விளம் விளம் மா காய் விளம் மா நிரை எனும் வாய்பாட்டில் 1206, 1327 ஆகிய இரண்டு குறள்களும், விளம் விளம் மா விளம் விளம் மா நிரை எனும் வாய்பாட்டில் 1224, 1238 ஆகிய இரண்டு குறள்களும் ஒன்றி அமைந்துள்ளன என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

## முடிவுரை

சங்கம் மருவிய கால இலக்கியமாகக் கருதப்படுவதும் தமிழ்நாடு அரசால் கி.மு.31 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நூலாகவும் கருதப்படும் திருக்குறளில் விருத்தப்பாவிற்கான கூறுகள் காணலாகின்றனவா என்னும் நோக்கோடு ஆராயத்தலைபட்டு, ஆய்வுக் கட்டுரையின் சுருக்கம் கருதி திருக்குறளின் காமத்துப்பாலில் உள்ள 250 குறள்கள் மட்டும் ஆய்வு எல்லையாக எடுத்துக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் நோக்குங்கால் பல்வேறு குறட்பாக்கள் வெவ்வேறு வாய்பாடுகளுடன் ஒன்றிவருவது அறியலாகின்றது. விருத்தப்பா என்பதே

ஒரே வகையான சந்த நயம் பொருந்த வேண்டி அமையப்பெற்ற வாய்பாடுகளே என்பதால், இவ்வாய்வுக் கட்டுடையில் குறிப்பிடப்படும் குறட்பாக்களும் ஒரே வகையான சந்த நயத்துடன் ஒன்றி அமைந்துள்ளன. ஆயினும் இவையாவும் முன்னரே திட்டமிடப்பட்ட வாய்பாடாக அமையவில்லை. இலக்கிய ஓட்டத்தினூடே இயல்பாக அமைந்தனவையாகவே தெரிகின்றது. இருப்பினும் இவைபோன்ற சந்த நயம் பொருந்தி அமைந்த பாடல்களே பிறகாலத்தில் விருத்தம் என்னும் வடிவம் தோன்ற காரணங்களாய் அமைந்திருக்கலாம் என யூகிக்க முடிகின்றது.

**மேற்கோள் நூல்கள்**

1. குமாரசாமிப் புலவர்.அ, யாப்பருங்கலக் காரிகை குமாரசாமிப்புலவர் உரை, இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,1938
2. கௌமாரீஸ்வரி.எஸ் (ப.ஆ), திருக்குறள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், 2004
3. பரந்தமனார் அ.கி, கவிஞராக, பாரி நிலையம், சென்னை , 2007
4. பவானந்தம்பிள்ளை. (ப. ஆ) .,யாப்பருங்கல விருத்தியுரை, லாங்மேன் கீரீன்ஸ் அச்சகம், சென்னை. (1916)
5. வெற்றியழகன்., யாப்பரங்கம், சீதைப்பதிப்பகம், சென்னை-05